விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 2 றவி ஆகிர் 19 இதழ் 3

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14-2-82

யாழ். மாவட்டத்தில்

# கிராமோதய சபைகள் அடுத்தமாதம் அமையும்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான விசேட சேவை அலுவலர்கள் நியமனம் தற்போது வழங்கப்பட்டிருப்பதால் கிராமோதய சபைகள் அடுத்த மாத இறுதி வாரத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடெங்கிலும் மேற்படி நியமனம் செப்டம்பர் மாதம் வழங்கப்பட்டு அக்டோபர் மாதத்தில இச்சபைகள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபோதிலும் யாழ். மாவட்டம் உட்படத் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் தொகுதிகளில் மேற்படி நியமனம் வழங்குவதில் இழுபறி இருந்து வந்தது தெரிந்ததே. (8-ம் பக்கம் பார்க்க)

குறிகாட்டுவான் இறங்குதுறையில்

# துப்பாக்கி சூட்டுக்கு ஒரு இராணுவவீரர் பலி!

## 2 துப்பாக்கி இளைஞர் கைவரிசை மினிபஸ் ஒன்றும் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

**குறிகாட்டுவான் இறங்குதுறையில் நேற்று நண்பகல் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவவீரர் ஒருவர் பலியானார். இச் சம்பவத்தின்போது அங்குநின்ற மற்றும் இரு இராணுவவீரர்கள் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை.**

குறிகாட்டுவான் இறங்கு துறையில், இராணுவாகனமொன்றில் வந்த மூன்று இராணுவவீரர்கள் அவ்விடத்தில் நின்றபோது இச்சம்பவம் நடந்தாகக் கூறப்படுகிறது. அங்கு இரு இளைஞர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபின் இறங்குதுறையில் நின்ற மினி பஸ் ஒன்றைஎடுத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டுச் சென்றதாகத் தெரியவருகிறது.

### நெடுந்தீவில் உல்லாசப் பிரயாணிகள்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு உல்லாசப் பயணிகளாகவந்த ஆண்களும் பெண்களுமாகப் பதினைந்து பேரைக்கொண்ட கோஷ்டியினர் பஸ் ஒன்றில் குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு வந்து, அங்கிருந்துநெடுந்தீவுக்கு சென்றதாகவும் இவர்கள்வந்த பஸ்ஸும் குறிகாட்டுவான்இறங்குதுறையில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டவர்களுடன் சாரதியும், நெடுந்தீவு சென்றுள்ளதாகவும் சுற்றுலாப் பொறுப்பாளர்கள் பிரஸ்தாப பஸ்ஸின் நிலையை அறிந்து கொள்ள முடியாதிருப்பதாகவும் கூறப்படுகிறது.

வெளிநாட்டுக் கோஷ்டியினர் யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியியிருந்துவிட்டு, நேற்றுக்காலை நெடுந்தீவுக்குப் புறப்பட்டார்களாம். நெடுந்தீவில் உள்ள வெளிநாட்டவரைப் பாதுகாப்புடன் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தேடுதல் வேட்டையில் முப்படைகள்

துப்பாக்கிப் பிரயோகம் செய்த இளைஞர்களையும், அவர்கள் கடத்திச்சென்ற மினிபஸ்ஸையும் கண்டுபிடிப்பதில் முப்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று நண்பகல் இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் புங்குடுதீவு, வேலணைப் பகுதிகள் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. இறங்கு துறைகளில் பலத்த காவல் போடப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் யாழ்.பஸ் நிலையத்திலுள்ள தீவுப்பகுதி மினிபஸ்கள் முப்படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டன.

குறிகாட்டுவான் இறங்கு துறைப்பகுதியில் பலத்த காவல்போடப்பட்டுள்ளதுடன் நேற்று நண்பகலிலிருந்து இறங்குறை போக்குவரத்துக்குத்தடை செய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவான் சென்றபஸ்கள் பெருங்காடு மட்டுமே சேவையிலீடுபட்டன. அதற்கப்பால் பிரயாணிகள் பஸ்ஸிலிருந்து இறங்கியே சென்றனர்.

நேற்று நடைபெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து குறிகாட்டுவான் துறைக்கு வந்த பிரயாணிகள் மட்டும் பலத்த சோதனையின் பின் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (க)

### புதுமையான கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பெண்கள் ஆய்வுவட்டம் நடத்தும் கண்டனக் கண்காட்சி ஒன்று நாளைக்காலை நடைபெறுகிறது.

பெண்களைவிற்பனைப் பொருளாக்கும் விளம்பரங்கள், இக்கண்டனக் கண்காட்சியில் இடம் பெறுகின்றன.

திருநெல்வேலியில் உள்ள ஈவ்லின்ரட்ணம் நிறுவனத்தில் நாளைக் காலைமுதல் மாலைவரை இக்கண்காட்சி நடைபெறும்.

### ரயில் எஞ்சின் தடம் புரண்டது

(மன்னார்)

தலைமன்னார் ரயில்நிலையத்தில் வண்டிகள் திரும்பும் இடத்தில் நேற்றுமுன்தினம் ரயில் எஞ்சின் ஒன்று தடம் புரண்டது.

வேகமாக வந்த ரயில் எஞ்சின் தடைகளையும் உடைத்துக்கொண்டு மணல்தரையில் இறங்கிவிட்டது. இதனால் தலைமன்னார் அனுராதபுரம் ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. இரவில் மீண்டும் ரயில்சேவை ஆரம்பமானது.

# கடைகள் மூடப்பட்டன 2வது படக்காட்சி இல்லை

## பிரயாணிகள் குறைவு

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாண நகரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வான்கள், டாக்ஸிகள், மினி பஸ்கள் யாவும் பிற்பகல் 4 மணிக்கு முன்னரே சேவைகளை நிறுத்திக்கொண்டன.

வடபிரதேசப் போக்குவரத்துச்சபை பஸ்கள் சேவையிலீடுபட்டபோதிலும், பிரயாணிகள் மிகக்குறைவாகவே காணப்பட்டனர்.

நேற்றிரவு 6மணிக்கே யாழ். நகரத்திலுள்ள அநேக கடைகள் பூட்டப்பட்டன.

யாழ். பஸ் நிலையத்திலுள்ள கடைகள் யாவும், நேற்றிரவு 7 மணிக்குப் பூட்டப்பட்டு, வெறிச்சோடிக் கிடந்தது. எந்த வீதியிலும் 7 மணிக்குப் பின்னர் சன நடமாட்டம் காணப்படவில்லை.

### படக்காட்சிகள்

சிலதியேட்டர்களில் நேற்றிரவு முதல் காட்சிக்கு மிககுறைவானவர்களே வந்திருந்தனர். இரண்டாவது காட்சி தியேட்டர்களில் நடைபெறவில்லை.

### பஸ் சேவை

வழக்கம்போல்பஸ்சேவையை நடாத்துமாறு வடபிரதேசச் செயலாற்றுமுகாமையாளர் அறிவித்ததைத் தொடர்ந்து பஸ்சேவை நடைபெற்றபோதிலும், பிரயாணிகள் எவரும் இருக்கவில்லை. பிரயாணிகள் இல்லாததினால், சில இடங்களுக்கு பஸ் சேவை நடைபெறவில்லை.

நேற்றுமாலையிலிருந்தே பிரயாணிகள் இல்லாததினால் புங்குடுதீவுக்கு பஸ்சேவை நடைபெறவில்லை (க.அ)

# சின்னக்கடை சந்தைஇடித்து நவீனசந்தை அமையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்னக்கடைச் சந்தையை உடைத்துவிட்டுஅங்கு புதிய சந்தை ஒன்றைஅமைக்க யாழ்.மாநகரசபை தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

நல்லநிலையில் தொடர்ந்தும் பாவிக்கக் கூடியதாக உள்ள சின்னக்கடைச் சந்தையை உடைக்கவேண்டிய அவசியம் எதுவுமில்லையென்றும் இதனை உடைப்பதால் மாநகரசபையின் பெருந்தொகைப் பணம் வீணாகுமே ஒழிய மக்களுக்கு எதுவித பலனும் ஏற்படப் போவதில்லையென்றும் வரியிறுப்பாளர்கள் கருதுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட சந்தையை உடைத்துவிட்டு புதியசந்தைக்கான அத்திவாரக்கல் நாட்டுவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச்சந்தைக்குப் பதிலாக தற்காலிக பாவனைக்காக பீச் ரோட்டில் கொட்டில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய சந்தைக்கான அத்திவாரக்கல் விரைவில் நாட்டப்படுமென்று யாழ். மேயர் திரு. இராசா விசுவநாதன் நகரமண்டபத் திறப்புவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே. (இ)

# வெளிநாட்டு கோஷ்டி நெடுந்தீவில் தங்கியது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலிருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணிக்குப் புறப்படும் படகுசேவை நடைபெறாததனால் அங்கு சென்ற வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் கோஷ்டி திரும்பி வரமுடியாத நிலைமை ஏற்பட்டது.

வெளிநாட்டைச் சேர்ந்த 15 பேரைக் கொண்ட உல்லாசப்பிரயாணிகள் கோஷ்டி நேற்று நண்பகல் நெடுந்தீவு (8 பக்கம் பார்க்க)

1981ம் ஆண்டு டிசம்பர் 28, 29, 30ம் திகதிகளில் திருச்சிராப்பள்ளியில் இடம்பெற்ற முதலாவது உலக கிறிஸ்தவத் தமிழ் மாநாட்டின் 29ம் திகதி நிகழ்ச்சிகளில் எஸ். பரமானந்தம் அரங்கில் டாக்டர் ந. பிச்சமுத்து தலைமையில் நடைபெற்ற சிறப்புக கருத்தரங்கில் 'இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றுண்டில் அமெரிக்க மிஷனரிகள் ஆற்றிய அறிவியற்றமிழ்ப்பணி' என்ற இவ் ஆய்வுக் கட்டுரை வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

[இக் கட்டுரையாளர் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் பி. எஸ். ஸி. (முதலாண்டு) விலங்கியல் பயில்கின்றார்.]

# எங்கோ பிறந்து எமக்காக வாழ்ந்த (மிஷனரி) தொண்டர்கள்

மாகச் சுவைபடத் தந்துள்ள பாங்கினைக் காண்க. கரோல் அவர்கள் மிஷனரிமாரின் வேண்டுகோளுக்கிணங்க வான சாஸ்திரசஞ்சிகையான தமிழ்ப் பஞ்ஞாங்கமொன்றையும் வெளியிட்டு வந்தார்.

இற்றைக்கு ஒன்றேகால் நூற்றாண்டுகட்கு முன்னர், ஆங்கிலத்திலேகூட அறிவியல் சிறப்புறப் பரவியிராதகாலத்தில், தமிழ்மொழியில் நவீன மருத்துவத்தினை வளர்க்க அடியெடுத்து வைத்ததன் மூலம் தமிழ் மருத்துவக்கல்வி வரலாற்றில் தமக்கோர் தனியிடம் வகித்து நிற்பவரே வைத்தியக்கலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன் என்னும் அமெரிக்க மிஷனரியாவார்.

1819ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்கமிஷன் வைத்தியசேவையில் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக்கல்லூரியின் தாபகரான ஐடா ஸ்க்கடரின் பாட்டனும் உலகின் முதலாவது மருத்துவமிஷனரியுமான டாக்டர் ஸ்கடர், டாக்டர் நாதன் உவாட் ஆகியோரைத் தொடர்ந்து 1847ம் வருடம் அக்டோபர் மாதம் ஆறும் நாள் இலங்கை மண்ணில் காலடிஎடுத்துவைத்த டாக்டர் கிறீன் அவர்கள் சுதேசிகள் மத்தியில் மேனாட்டு வைத்தியர்களை உருவாக்கவேண்டுமென்ற இலட்சியஉணர்வோடு செயலாற்றினர். இலங்கையின் முதலாவது மருத்துவப் பாடசாலையினை நிறுவியதோடு, தமிழ்மொழியில் மேலைத்தேய வைத்தியம் வாழ்ந்து வளரும் வண்ணம் அதனை வளம்படுத்திய, மேதை கிறீன் அவர்கள் அன்று ஆக்கிவைத்த அறிவியற் கலைச்சொல்லாக்க மொழிபெயர்ப்புக் கொள்கைகள் இன்றைய கல்வியாளர்கட்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாக விளங்குகின்றன.

## தமிழில் மருத்துவம்

அமெரிக்காவில் இருக்கும் போதே தமிழ்மொழியைக் கற்க ஆரம்பித்ததனால், மிக

- சு.தேவானந்தர் -

விரைவில் தமிழ்மொழியில் நன்றாகப் பேசவும் எழுதவும் ஆற்றல்பெற்றார். தமிழ்மொழியில் வைத்தியக்கல்வியை மேற்கொள்வதெனில் சிறப்பான நூல்கள் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டுமென எண்ணி முதல்நடவடிக்கையாக நூல்களைத் தமிழாக்கம் செய்யும் பணியில் இறங்கினார். அவ்வேளையில் ''யான் மேற்கொண்டுள்ள இம்முயற்சியானது தமிழில் மேனாட்டு வைத்தியம் பரவ ஓர் அத்திபாரமாகவும், ஆரம்பமாகவும் அமைதல் வேண்டுமென விரும்புகின்றேன்'' என்ற கிறீன் அவர்களின் கூற்று அன்னாரது தமிழ் பற்றிய இதய வேட்கையினை எடுத்துக்காட்டுகின்றது.

அவர் முதன் முதலில்மொழி பெயர்ப்புக்கென எடுத்த நூல் டாக்டர் கொல்வின் கட்லர் எழுதிய ''அங்காதி பாதம்'' (Anatomy) என்னும் உடலமைப்பியல் நூலாகும். 1852ம் வருடம் அச்சேறிய அந்நூலினைத் தொடர்ந்து அவரது மாணவர்களைக் கொண்டு எழுதுவித்துத் தாமும் மேற்பார்வை செய்து மொழிபெயர்ப்பு நூல்கள் பலவற்றை வெளியிட்டதோடு அருஞ்சொல்அகராதியொன்றினையும் ஆக்கினர். 1856ம் ஆண்டில் அங்காதி பாதம் எனும் நூலை திருத்தியும் புதுக்கியும் வெளியிடுவதற்குப் பண உதவி வேண்டிப்பிரித்தானிய ஆட்சியாளருக்கு ஓர் கடிதம் எழுதினர். அதற்கு அந்நிய ஆட்சியாளர்கள் ஆங்கிலந்தவிர்க்கும் கொள்கை பேராபத்தானதும் தற்கொலைக்கொப்பானதுமாகும்'' என்று கூறி எவ்வித உதவியுமளிக்க மறுத்தனர். எண்ணிய எண்ணியாங் கெய்துவார் எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க கிறீன் அவர்கள் எவ்வித எதிர்ப்பையும் பொருட்படுத்தாது மனத்திண்மையுடன் செயலாற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க, தமிழ் மொழியினைப் போதன மொழியாகக் கொண்ட முதலாவது மருத்துவ வகுப்பினை 1864ம் ஆ. ஆரம்பித்தார். திருவாளர்கள் கே. இளையபிள்ளை எஸ் சிற்றம்பலம், வி சிற்றம்பலம்: எஸ். டெவிட், டானியல் வெற்றிவேலு, கந்தப்பர், ஏ. சிவசிதம்பரம், எம். சின்னப்பு, எஸ், முருகேசு, ஆர். எஸ் வேலுப்பிள்ளை ஆகியோரே இம் முதலாவது வகுப்பில் கற்றுத் தேறிய பதின்மருமாவர்.

## கலைச் சொல்லாக்கம்

வைத்தியகலாநிதி கிறீன் அவர்கள் அன்று ஆக்கிவைத்த கலைச் சொல்லாக்க, மொழிபெயர்ப்புக்கொள்கைகள் அவரது தெளிந்த அறிவையும், தீர்க்கதரிசனத்தினையும் எடுத்துக்காட்டுகின்றன. மொழிபெயர்ப்பானது ஆங்கில வசனங்களை அப்படியே இலக்கணத் தமிழில் எழுதுவதல்ல, அவ்வசனங்களில் பொதிந்திருக்கும் கருத்துக்களை எளிய தமிழில் பலரும் புரிந்துகொள்ளும் வண்ணம் எழுத வேண்டும் என்றகருத்துடையவராயிருந்தார். மொழிபெயர்ப்பு தொடர்பாக அன்னார் குறிப்பிடுகையில், ''மொழிபெயர்ப்பானது ஒரு வயலினூடாக நடந்து செல்வதைப் போலல்லாது உழுது செல்வதைப் போன்றே அமைய வேண்டுமென்றும் தமிழ் மொழி பெயர்ப்பினை வாசிக்கும்போது அங்கு ஆங்கிலேயரை அல்ல ஒருதமிழரையே காண வேண்டுமென்றும் ஆங்கில நூலினை மொழிபெயர்க்கும் போது அந்நூல் தமிழ் மொழியில் மட்டுமல்ல தமிழ் தேச வழக்கங்களுக்கும் இயைபாக அமையவேண்டுமென்றும்'' அவர் வெளியிட்ட கருத்துகள் மொழிபெயர்ப்புத் துறையின் முன்னோடிச் சிந்தனைகளாக அமைவதோடமையாது காலத்தால் அழியாதனவாயும் விளங்குகின்றமை கண்கூடு.

அங்காதிபாதன் (Anatomy) கெமிஸ்தம் (Chemistry) மனுஷசுகரணம் (Human physiology) இரண வைத்தியம் (Surgery). வைத்தியம் (Medicine), வைத்திய கைவாடகம், குழந்தைகள் பெண்கள் ஆகியோரின் நோய்கள், கலைச் சொற்கள் முதலான பல அரியமருத்துவ நூல்கள் கிறீன் வைத்தியரின் உழைப்பின் சின்னங்களாக விளங்குகின்றன. அத்தோடு தமிழில் விஞ்ஞானக் கலைச் சொற்களை ஆக்குவதில் திடமான கொள்கைகளை வகுத்ததோடு, கலைச் சொல்லாக்கத்தில் நாடுகளுக்கிடையே ஒருமைப்பாடு காண வேண்டுமென அன்றைய காலப்பகுதியிலேயே தீர்க்க தரிசனத்துடன் உழைத்தவர் கிறீன் அவர்கள்.

இறுதியாக, தமிழரின் இலக்கியத்திற்கும் அரசியலுக்கும் தொண்டாற்றிய பலருக்கும் சிலையெடுக்கின்றோம்; கௌரவிக்கின்றோம். ஆனால் தமிழ் மக்களே அறிவியல் வேட்கையின்றி இருந்த காலத்தில், தமிழ்த்தாய்க்கு அறிவியலாம் அணிகலன் சூடிச் செழுமைப் படுத்தவென எங்கோ பிறந்து வளர்ந்து, எமக்காக வாழ்ந்த இம்மிஷனரித் தொண்டர்களை நினைவுகூர்வது ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடனாகும்.

[நேற்றைய தொடர்ச்சி]

விக்கிரமாதித்த ராசன் தன் சபையிலிருந்த புலவர்களுக்குச் சில திரவியங்களைச் சரிவரப் பங்கிட்டுக்கொடுத்தான். அப்பொழுது புலவர்களில் மூவரில்லையானால் மற்றவர்களில் ஒவ்வொருவரும் ஐநூறு வராகனை அதிகப்படப் பெறுவார்கள். புலவர்களோடே ஆறுபேரைக் கூட்டினால் ஒவ்வொருவரும் நூற்றிருபது வராகன்கள் குறையப் பெறுவார்கள். சபையார் புலவரெத்தனை? அவர்களுக்குக் கொடுத்த வராகன்கள் எத்தனை?

உயர்தர அட்சரகணிதத் தீர்வுகாணவேண்டிய இவ் வினாவை அன்னார் கதைரூப

## யாருக்குள்ளே நல்ல நாடு--3

# இலங்கையிலும் பரவிய பரதரின் நிருத்தம்!

குச்சிப்புடி நடனமும் நாட்டிய நாடகமாக ஆண்களாலேயே ஆடப்பட்டு வந்தது. வேதாந்தம் சத்ய நாராயண சாஸ்திரி எவரும் பிரமிக்கும் விதத்தில் சத்தியபாமா, உஷா வேடங்கள் புனைந்து ஆடுவார் குரு. வேம்பட்டி சின்ன சத்யம் இக்கலைக்கு மெருகூட்டி, தனிநபர் ஆடலுக்கேற்ற விதத்திலும் அதனை அமைத்தார். பெண்களும் இக்கலையை பயில்வதற்கு அது பெருவாய்ப்பாக இருந்தது.

ஜாமினி கிருஷ்ணமூர்த்தி ஷோபா நாயுடு, காமதேவ், போன்றவர்கள் இன்று இந் நடனத்தில் பிரபல்யத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆக, இப்படி எல்லா நடன வகைகளிலுமே ஒரு விளிப்பும் புத்தாக்க முயற்சிகளும் பரவலாக ஏற்பட்டன ஆனால் பின்னர் அண்மைக்காலம் வரை குறிப்பாக பரதநாட்டியத்தில் பொதுவாக ஒரு தேக்க நிலையே ஏற்பட்டிருக்கிறது, வேண்டுமானால் 'வளமான' தேக்க நிலை என்றும் அதனைச் சொல்லாம்!

— சம்பிரதாயமாகவும் சாஸ்திரீயமாகவும் அமைந்த இந்நடனங்கள் ஏதும் மாற்றங்கள் புரிவதற்கு உரியன வல்ல என்று கூறி, ஆக்க முயற்சிகள் வெகு அரிதாகி, அப்படியே 'ஒப்புவிக்கும்' ஒரு நிலையே நீடித்து வந்தது சம்பிரதாயம் நாட்டிய சாஸ்திர விதிகள் என்பன பற்றி பேசினாலும் அவை பற்றி தெரிந்து கொள்ள ஆராய ஏனோ நாட்டம் அதிகம் ஏற்படவில்லை. இஃது இந்திய நடனங்களில் ஆக்க முயற்சிகளுக்கு இடமில்லை என்ற தப்பான ஓர் அபிப்பிராயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்திய நடனமானது மாறுதலும் வளர்ச்சியும் அடைந்து கொண்டே தான் வந்திருக்கிறது தொடர்ந்தும் அஃது மாறுதல்களுக்கும் வளர்ச்சிக்கும் உரியதுவே தான். பரதரின் கலை, அன்றும் இன்றும்' Bharathas Art, Then and Now) என்ற தனது நூலில்பத்மாகூறியிருப்பதுபோல, நாட்டியசாஸ்திரமும் மற்றும் நூல்களும் இலக்கணம் போன்றவையே, அவற்றைக் கையாளும் கலைஞர்கள் கவிஞர்கள்

- மாலி -

போன்றவர்கள்.

— இக்கண கட்டுப்பாட்டுக்குள் கவிஞன் சுதந்திரமாக கவிதை படைக்கிறான்! அவ்வாறான ஆக்க முயற்சிகளே நடனத்திலும் தேவை அத்தகைய முயற்சிகள் எல்லையற்றனவாகவேயிருக்கும்.

ஆடலோடு மாத்திரம் திருப்தியுற்றுவிடாது, இக்கலையை மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற மன ஆவல் இன்று ஏற்பட்டிருக்கிறது. புராதன வரலாறு சிற்பங்கள் நாட்டிய நூல்கள் பற்றிய ஆய்வில் இன்று கவனம் செலுத்தப்படுகிறது. டாக்டர் கபிலா வாத்ஸ்யாயன் இத்தகைய ஓர் ஆய்வின் மூலம் 'இலக்கியத்திலும் கலைகளிலும் சாஸ்திரீய நடனம்' (Classical Dance in Literature and the Arts) என்ற நூலை எழுதினார். இளைய தலைமுறையினருள் டாக்டர் பத்மா சுப்ரமண்யம் 'கரணங்கள்' (Karanas) பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். அசைவுகளையும் பாவங்களையும் விஸ்தரிப்பது பற்றிய நுட்பமான சாத்தியங்களைக் காண அவர் விழைகிறார். டாக்டர் கனக ரேலே மோகினி ஆட்டம்பற்றி ஆராய்கிறார்.

பல கருத்து மோதல்களையும் எதிர்ப்புகளையும் இவர்கள் ஏற்படுத்தினாலும் இவ்வாராய்ச்சிகள் கொள்கைக்கும் செய்முறைக்குமிடையேஉள்ள இடைவெளிக்கு இணைப்பை ஏற்படுத்தி, ஆக்கமுயற்சிகளுக்கு வழியமைக்கவே செய்யும் அத்துடன், இவர்களின் இம் முயற்சிகள் ஆடலுக்கு அப்பால் இவற்றையும் தாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு விளிப்பையும் இன்று இக் கலையில் ஈடுபட்டுள்ள பலர் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. பொதுவாக இது பத்மா சுப்ரமண்யம் ஏற்படுத்திய ஒரு விளிப்பேதான். நாட்டிய நூல்கள், வரலாறு, என்பவற்றைக் கற்றுக்கொள்வதில் பலர் இன்று ஈடுபட்டிருக்கிறார்கள். இவற்றை அறியாதிருப்பது அல்லது தாமும் ஓர் ஆராய்ச்சியாளராகவில்லாதிருப்பது ஒரு குறை என்று கருதுகின்ற ஒரு மனோநிலைகூட சிலருக்கு ஏற்படுகிறது!

ஆக, தேங்கிக் கிடந்த நதிகள் இப்போது மீண்டும் மெல்ல பிரவாகிக்கத் தொடங்கியிருக்கின்றன. அவற்றுக்கு நல்லபடி வடிகாலமைத்து வளமாக்குகின்ற ஒரு கால்கோள் வைபவமாகத் தான் சென்னையில் நடைபெற்ற முதலாவது நாட்டியக்கலை மாநாடு அமைந்தது.

ஸ்ரீ கிருஷ்ண கான சபா, பத்மாவின் 'நிருத்யோதயா', பம்பாய் புலாபாய் ஞாபகார்த்த நிறுவனம் ஆகியன இணைந்து கடந்த டிசம்பர் ஜனவரி மாதங்களில் தியாகராஜ நகர் ஸ்ரீகிருஷ்ணகானசபாவில் இந்த முதலாவது மாநாட்டை நடாத்தின. கலையும் வாழ்வும் இணைந்த இந்திய துணைக்கண்டத்தின் கலாச்சார மேம்பாட்டை அந்தத் தினங்களிலே அந்த மேடையிலே பார்த்தோம். ஏன் இலங்கையின் கலாச்சாரத்தையும் பார்த்தோம்.

இந்திய சாஸ்திரீய நடனங்கள் அனைத்துமே பரதரின் நாட்டிய சாஸ்திரத்தைத்தான் அடிப்படையாகக்கொண்டிருக்கின்றன.

ஒரே வர்ணத்தின் வெவ்வேறு 'சாயல்களாகவே' ஒவ்வொரு நடனவகையும் தோற்றுகின்றன.

பரதரின் நாட்டிய சாஸ்திரத்தை நினைவில் நிறுத்தி, அந்த கண்ணோட்டத்தில் பார்க்குபோது, இந்திய நடன வகைகள் ஒவ்வொன்றுமே அவற்றில் தெரிகின்ற வேற்றுமையினூடே ஓர் அடிப்படை ஒற்றுமையைக் கொண்டிருப்பதை எளிதாகவே கண்டு கொள்ளலாம்.

இவை ஒவ்வொன்றிலும் பாதரின் நாட்டிய சாஸ்திர அம்சங்கள் சிதறுண்டு கிடக்கின்றன. இந்தியாவின் பிரதேசரீதியான இந்நாட்டிய வகைகளில் மாத்திரமன்றி, அண்டை நாடுகளான இலங்கை, பர்மா, இந்தோனேஷியா ஆகிய நாட்டு அரங்களிலும் பரதரின் நிருத்த அம்சங்களைக் காணமுடிகிறது என்று டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவரின் 'பரதரின் கலை—அன்றும் இன்றும்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

(தொடரும்)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி புத்தூர் பாடசாலை அபிவிருத்திசபை. விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## மயிலிட்டியில்...

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர்சபை பத்தாண்டு நிறைவுப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் மயிலிட்டி துறட்டையிட்டி அருள்மிகு ஞானவைரவர் ஆலயத்தில் திரு. க, சிவலோகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (வெ)

# பாகிஸ்தானுடன் நட்புறவு ஒப்பந்தம் செய்ய இந்தியா தயாராக உள்ளது

## இந்திரா கூறுகிறர்

புதுடில்லி, பெப். 13

**பாகிஸ்தானுடன் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இந்தியா தயாராக உள்ளது. அதை ஏற்றுக்கொள்வது பாகிஸ்தானைப் பொறுத்தவிடயம்.**

**இதேவேளையில் பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதவிநியோகம் இந்திய மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.**

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சுவீடன் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த விசேட போட்டியில் தெரிவித்துள்ளார்.

திருமதி காந்தி மேலும் தெரிவித்துள்ளதாவது:

### சோவியத்யூனியனை பாகிஸ்தான் தாக்காது

அமெரிக்க ஆயுதங்களை பாகிஸ்தான் வேறு எந்த நாடுகளுக்கும் எதிராகப் பயன்படுத்தமாட்டாது. நிச்சயம் அந்த ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராகவே அது பயன்படுத்தும். சோவியத்யூனியன் மீது ஒருபோதும் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தாது.

நாடுகளுக்கிடையில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது சர்வ தேச நலனுக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.

அண்டைநாடுகள் மிகுந்த பலமுடையதாக இருக்கவேண்டும் என்றே இந்தியா விரும்புகிறது. அந்தப் பலம் எமது நாட்டை எதுவிதத்திலும் பாதிக்கக்கூடாது.

சுவீடிஷ் பிரதமருடன் பேச்சு நடத்தியபோது சுவீடனிடமிருந்து ஆயுதங்களை வாங்குவது குறித்து நாம் எதுவும் பேசவில்லை. (இ)

---

பங்களாதேஷ் அமைச்சர்கள் மீதான

## ஊழல் குற்றச்சாட்டை உடன் விசாரிக்க உத்தரவு

டாக்கா, பெப். 13

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பதவிநீக்கம்செய்யப்பட்டுள்ள பங்களாதேஷ் அமைச்சரவை உறுப்பினர்கள் மீதான விசாரணையை உடன் ஆரம்பிக்குமாறு ஜனதிபதி ஜனப் அப்துல் சித்தார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி பதவிஏற்ற ஜனதிபதி ஜனப் சத்தார் கடந்த வியாழனன்று தமது 77 நாள் அமைச்சரவைச் சேர்ந்த 42அமைச்சர்களைபதவி நீக்கம்செய்தது தெரிந்ததே. (இ)

---

“சர்வதேச விமானங்களில்:

## கோளாறுகள் ஏற்படுவது சகஜம் எமது விமானம் விதிவிலக்கல்ல”

### விபத்துக்குள்ளான விமானக் கம்பெனிஅதிகாரி கவலை

(கொழும்பு)

“எமது விமானத்திற்கு ஏற்பட்ட கோளாறுபோல ஏனைய விமானங்களுக்கும் அடிக்கடி ஏற்படுவதுண்டு. அண்மைக் காலங்களில் கட்டுநாயக்கா விமானத்தளத்தில்கூட இதை ஒத்த பழுதுகள் ஏனைய பெரும் விமானங்களுக்கும் ஏற்பட்டுள்ளன. ஆனல் இவற்றை ஒரு பெரும்விஷயமாக இலங்கைப் பத்திரிகைகள் முக்கியத்துவம்கொடுத்து விமர்சித்திருக்கின்றன.” என்று, தற்போது சக்கரங்களில் பழுது ஏற்பட்டு திருத்தப்பட்டுவரும் வளைகுடாவிமான, விமானச்சேவையின்உயர்அதிகாரிஒருவர்கவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில், 32 வருடங்களாக நீண்டகால அனுபவத்துடன் பாதுகாப்பான சேவையை எமது விமானக் கம்பனி வழங்கிவருகிறது. எனவே இத்தகைய ஒரு சிறு கோளாறு பற்றி பெரிதாக விளம்பரப்படுத்தியிருப்பது, நாம்மக்களுக்குஇதுவரைஎமது சேவையின் பாதுகாப்புப் பற்றியும் அனுபவங்கள் பற்றியும் ஏற்படுத்திய நல்ல அபிப்பிராயங்களுக்கு களங்கம்விளைவிப்பதாகவிருக்கிறது. விமானங்களில் ஏற்படும் தொழில் நுட்பக் கோளாறுகள் சகல சர்வதேச விமானநிலையங்களிலும் ஏற்படும் சகஜ நிகழ்ச்சியாகும். இதற்கு எமது சேவை மட்டும் விதிவிலக்கல்ல” என்ருர். (கி)

---

## திறப்பு விழா இன்று

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் 26 ம் இலக்க மயிலிட்டி வடக்கு கிளையின் புதிய கட்டிடத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமையும் மேற்படி சங்கத்தின் 23-ம் இலக்க பலாலி கிளையின் புதிய கட்டிடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமையும் நடைபெற உள்ளது.

சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாக்களில் எதிர்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கமும் பாரியாரும் பிரதம அதிதிகளாக கலந்து கொள்வர்.

மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அதிகாரிகளும் பங்கு பற்றுவர். (இ)

---

சட்டவிரோத கள் விற்பனைவழக்கு

## குடித்தது என்ன கள் என்பது தெரியாது!

### கலால் உத்தியோகத்தர் சாட்சியம்

(சாவகச்சேரி)

சம்பவதினம் நானும் எனது ஊழியர்களுமாக வெள்ளாம் போக்கட்டிக்குச் சென்ருேம். ஜீப்பால் இறங்கி சுப்பிரமணியம் என்பவரிடம் 2ரூபா தாள் நம்பர் குறித்துக் கொண்டு கொடுத்து நான் வரும்வரை எதிரியிடம் கள் வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கும்படி அனுப்பினேன். சிறிது நேரத்தில் நான் போனபொழுது சுப்பிரமணியம் தேங்காய்ச் சிரட்டையிற் கள்ளுவாங்கிக் குடித்துக்கொண்டு நின்ருர்.

அல்லாரை வெள்ளாம் போக்கட்டியைச்சேர்ந்த வல்லி செல்லையா என்பவர் உத்தரவுப்பத்திரமின்றிக் கள் வைத்திருந்து விற்பனை செய்தார் எனச் சாவகச்சேரிப் பொலிசாராற் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச் காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபொழுது சாட்சியமளித்த சாவகச்சேரிக் கலால் நிலையப் பொறுப்பதிகாரி நடராசா பாலசுந்தரம் மேற் கண்டவாறு கூறிஞர். மேலும் அவர் தொடர்ந்து தம் சாட்சியத்தில் கூறியதாவது;

நான் உடனே எதிரியின் மடியிலிருந்து ரூபா 2ஐயும் எடுத்துக்கொண்டேன். அவரது இடத்தில் 1 கலன் 32 கிறும் கள் இருந்ததைக் கண்டேன். இந்த எதிரியிடம் அனுமதிப் பத்திரம் இல்லை. சான்றுப் பொருட்களை எடுத்துக் கொண்டு எதிரியைப் பிணையில் விட்டேன். பின் இம் மன்றில் 11.3.81ல் வழக்கைத் தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி எதிரியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: கந்தோரிலிருந்து எத்தனைமணிக்குப் புறப்பட்டீர்கள்?—9.45க்கு

சட்: எத்தனைபேர் புறப்பட்டீர்கள்?— சுப்பிரமணியம் மகேந்திரன், அற்புதகுமாரன் உட்பட ஐவர்.

சட்: வெளிக்கிட்டு முதன் முதல் எங்கே நிற்பாட்டினீர்கள்?—அல்லாரையில்

சட்: சுப்பிரமணியம் என்ன உடுப்போடு வந்தார்?— வேட்டியும் சேட்டும்.

சட்: சுப்பிரமணியத்தைக் கள்ளுச்சங்கக் காரருக்குத் தெரியுந்தானே!—ஆம்.

சட்: கள்ளுக்கடை வழக்கமாக எத்தனை மணிக்குத் திறந்து விற்பனை செய்கிறது? —11மணிக்கு

சட்: மரத்துக்கு மரம் போகும்பொழுது சீவிய கள்ளைக் கொண்டுதானே போக வேண்டும்?— அப்படிக் கொண்டு சென்ருல் அது குற்றம்.

சட்; சீவியகள்ளை மரத்துக்குக் கீழே வைத்துவிட்டுச்சென்ருல் பாதுகாப்பில்லை அப்படித் தானே?—ஆம்

சட்: எதிரிக்குச் சங்கம் வழிப்பாசும் உத்தரவுப்பத்திரமும் கொடுத்தது உமக்குத் தெரியுமா?— தெரியாது அப்படிக் கொடுக்க முடியாது.

சட்: என்னகள்ளை நீங்கள் பிடித்தீர்கள் தென்னங்கள்ளா பனங்கள்ளா, கித்திலா? — எனக்கு என்ன கள்ளென்று தெரியாது.

நீதி: அடுத்த தோட்டத்தில் இறக்கிய கள்ளைத் தன் வீட்டில் வைத்து விட்டுத்தானே உடுப்பு மாற்றிக் கொண்டு தவறணைக்குப்போக வேண்டும்.

சாட்: உடுப்பை மாற்றும் நோக்கமாக இருந்தால் அதை குற்றமாக எடுக்க முடியாது.

சுப்பிரமணியம் தனது சாட்சியத்தில் கூறியதாவது:

பொறுப்பதிகாரியின் பணிப்பின் பேரில் செல்லையாவிடம் அடையாள மிடப்பட்ட ரூபா 2ஐக் கொடுத்து கள்ளை வாங்கிக் குடித்துக்கொண்டு நின்றேன் பொறுப்பதிகாரி வந்து செல்லையாவைக் காசுடன் பிடித்தார்.

சட்: செல்லையா வீட்டை இதற்குமுன் தெரியுமா? — ஒருகிழமைக்கு முன்போய் அவரது வீட்டைக் குறிப்பாக அறிந்துகொண்டேன்.

சட்: நீர் அன்று யூனிப்போமுடன்தானே போனீர்?— களவுபிடிக்க யூனிப்போமுடன் போகப்படாது.

நீதி: யூனிப்போமுடன் எல்போ செல்வீர்? —[illegible]ந்து சுற்றும்போது

நீதி: நீர் குடித்துக்கொண்டு நி[illegible]குப்போது யா[illegible]ந்தார்கள்? —, பொறுப்[illegible]ாரியும் மகேந்திரனும்.

நீதி: என்ன கள் நீர் குடித்தீர்?— தெரியாது.

நீதி: நீர் ஓர் க[illegible]லால் உத்தியோகத்தர் விசி[illegible]திரமான பதில் கூறுகி[illegible]ர். மௌனம்.

நீதி: [illegible]ட்[illegible]கும் [illegible]ளுக் கொடுக்குமிட[illegible] [illegible]ரம் எவ்வளவு? —4 3 [illegible]

நீதி; காசு எந[illegible] எதிரி வைத்திருந்தா? [illegible]

[illegible]தி: கள் புதிய[illegible] பழையதோ?—தெரிய[illegible]

23ம் திகதி வரை [illegible]த்திவைகப்பட்டது.

---

## கவிஞர் சீனிவாசனுக்கு ராஜாஜி விருது

சென்னை, பெப், 13

கவிஞர் ஆனந்த சீனிவாசனுக்கு முதலாவது ராஜாஜி விருது வழங்கப்பட்டுள்ளது.

மகாத்மாகாந்தி பற்றி அவர் எழுதிய கவிதைக்காகவே கவிஞர் சீனிவாசனுக்கு இந்த விருதும் 10 ஆயிரம் ரூபா பரிசும் வழங்கப்பட்டுள்ளது. (இ)

---


# மின்சார உபகரணங்கள்
# மின்னியல் பொருட்கள்
# மின்சார பாவனைப் பொருட்கள்

காகிதாதிகள் - பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்புப் பொருட்களுக்கும்

# அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும், மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனையாளரும்)

**196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(போன் : 8291 தந்தி : “வாணர்சன்ஸ்”
(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக)

தலைமையகம் :

## பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்

**78, மலிபன் வீதி, கொழும்பு 11.**
போன் : 24821 — 28244

## லெட்சுமிபவான்

97, ஒல்ஹொட்மாவத்த, — — கொழும்பு - 11

# புதிய ஆசிரியர் நியமனம் பற்ருக்குறையை தீர்க்குமா?

நாடெங்கிலுமுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் சுமார் ஒரு லட்சத்து 46 ஆயிரம் ஆசிரியர்கள் இன்று கடமையாற்றுகின்ருர்கள். இந்த ஆசிரியர்களிடம் சுமார் 4 லட்சம் மாணவர்கள் கல்வி பயிலுகின்ருர்கள். ஆனுல் நாட்டில் எந்த மாவட்டத்தை எடுத்தாலும் ஆசிரியப் பற்ருக்குறைதான் நிலவுகின்றது.

நகரப்புறப் பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் உண்டு. ஆனுல் பின்தங்கிய கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகளில் 50—250 வரை மாணவர்களைக் கொண்ட சில பாடசாலைகளில் ஒரு ஆசிரியர், இரு ஆசிரியர்களே உள்ளனர். சில பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

எமது நாட்டில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம் உட்பட சகல பாடங்களுக்கும் சுமார் 16 ஆயிரம் ஆசிரியர்கள் பற்ருக்குறை நிலவுகிறது. இப் பற்ருக் குறைக்குக் காரணம், ஆசிரியர்கள் அதிக சம்பளத்திற்காக வெளி நாடுகள் செல்வதே.

## சுதந்திரக்கட்சி ஆட்சியில்

1970—1977ம் ஆண்டுப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் நியமனம் பெற்ற சுமார் 27 ஆயிரம் பேரும் கணிதம், விஞ்ஞானம், விவசாயம், ஆங்கிலம், மனையியல், வர்த்தகம். கஷ்டப் பிரதேசம் என்ற பிரிவு அடிப்படையில் பற்ருக்குறைத் தொகைக்கேற்ப நியமனம் செய்யப்பட்டாலும் 1977ம் ஆண்டு தேர்தல் காலகட்டத்தில் குறிப்பிட்ட சில பிரிவுக்கு அதிகமானவர்கள் தேவைக்கு மேல் நியமனம் பெற்றனர்.

1977ம் ஆண்டுத் தேர்தல் முடிந்தவுடன் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் 1977—1980ம் ஆண்டு அக்டோபர் வரை சுமார் 24 ஆயிரம் பேர் நியமனம் பெற்றனர். பிரிவு அடிப்படையின்றி ''பொது'' என்ற அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிபார்சின் மீது நியமனம் பெற்றனர். குறிப்பிட்ட பாடங்கள் தகுதியாகக் கணிக்கப்படவில்லை.

**இரா. உதயகுமார்**

ஆசிரிய நியமனத்தில் அரசியல் தலையீடு காரணமாக தகுதியானவர்கள் நியமனம் பெறவில்லை. எதிர்க்கட்சி எம். பிக்கள் இதுகுறித்து பல தடவைகள் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்து, அடிப்படைத் தகமையாக க. பொ. த. உயர்தரமும் போட்டிப் பரீட்சையும் நடத்தப்பட வேண்டுமென்றனர்.

அதற்கிடையில் 1977 ம் ஆண்டு அக்டோபர் மாதத்துக்குப் பின்னர் நியமனம்பெற்ற ஆசிரியர்களுக்கு பொது அறிவு உளச்சார்வு பரீட்சை என்பன கடந்த வருடம் ஜுலையில் நடைபெற்றது. ஆனுல் இது வரை முடிவு வெளிவரவில்லை. இதற்குக் காரணம் என்ன?

ஆசிரிய நியமனம் கல்வி அமைச்சுக்கு பெரும் தலையிடியாக ஆரம்பித்ததும் கல்விச் சேவை ஆணைக்குழு 1980 ம் ஆண்டு அக்டோபர் ஆரம்பிக்கப்பட்டு நியமனமும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மாவட்ட சேவைத்திட்டம்

அக்குழு நாட்டிலுள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற 16 ஆயிரம் ஆசிரியர்கள் பற்ருக் குறையைத் தீர்க்க மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் பேரை பொது உளச் சார்பு, பொது அறிவு ஆகிய போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்ய உள்ளது. இப் பரீட்சை முறையினுல், அரசியல்வாதிகளின் சிபார்சு முறை நீக்கப்பட்டு தகுதிக்கு முதல் இடம் அளிக்கப்பட்டிருப்பதோடு அடிப்படைத் தகமையாக க. பொ. த. (உயர் தரம்) மூன்று பாடங்கள் தேவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1965 ம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதுதான் போட்டிப் பரீட்சை ஒன்றின்மூலம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகின்ருர்கள்.

## 60,000 பேர் விண்ணப்பம்

இப்பரீட்சைக்கு சுமார் 60 ஆயிரம் பேர் விண்ணப்பித்தும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 4,250 பேர் உட்பட 37 ஆயிரம் பேர் தகுதியானவராக கருதப்பட்டனர். இப் பரீட்சை இம்மாதம் 13ம் திகதி நாடெங்கிலும் உள்ள 244 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது. இவர்களில் தமிழ் முஸ்லிம்கள் சுமார் 9000 பேராகும். அதிக மாணவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தான் விண்ணப்பித்திருந்தனர். ஆனுலும் தமிழ்—முஸ்லிம் பாடசாலைகளுக்கு நாட்டின் 19 மாவட்டங்களிலும் இருந்தும் இந்த 9000 பேரில் 1021 பேர் தான் நியமனம் பெறுவார்கள்

## பற்ருக்குறை பாடசாலைகள்

பின்வரும் மாவட்டங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் பற்ருக்குறை நிலவுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆங்கிலம்: களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, திருமலை, குருநா

(7ம் பக்கம் பார்க்க)

# "அனுராதபுரத்தை பௌத்த தமிழ் மன்னரும் ஆண்டுள்ளனர்"

## பேராசிரியர் இந்திரபால தகவல்

(யாழ்ப்பாணம்)

"பௌத்தமானது தமிழர் பாரம்பரியத்திலும் இடம் பெற்றுள்ள ஒரு மதம் என்பதைப் பலர் மறந்திருக்கும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்கின்ருேம். அசோகன் ஆண்ட கி. மு. மூன்றும் நூற்ருண்டில் இலங்கையில் பௌத்தம் பரவத் தொடங்கிய போதே தமிழர் மத்தியிலும் பௌத்தம் பரவத் தொடங்கியது என்று கொள்ள இடமுண்டு"

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா, திருநெல்வேலி ஈவ்லின் ரத்னம் மண்டபத்தில் நடைபெற்ற இவ்வருடம் பெப்ரவரி மாதத்துக்கான விரிவுரையை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பேராசிரியர் மேலும் தமது விரிவுரையில், நமக்குக் கிடைத்த சீன ஆதாரங்களை ஆராய்ந்தால் இலங்கைக்குப் பௌத்தத்தைக் கொண்டு வந்த மகிந்த மகாதேரரே தமிழ் நாட்டிலும் பௌத்தத்தைப் பரப்ப முயன்ருர் என்று கூறுவதற்கும் இடமுண்டு. ஆனுல் இலங்கையில் போன்று தமிழ் நாட்டில் பௌத்தம் விரிவாகப் பரவவில்லை.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட 3ம், 6ம் நூற்ருண்டுகளிலேயே அது ஓரளவிற்குவலுவடைந்து இவ்விரு நூற்ருண்டுகளுக்கு மிடைப்பட்ட காலப்பகுதியில் சற்று செழிப்புற்றிருக்கக் காணப்பட்டது.

இக்கால கட்டங்களிலேயே தமிழ் நாட்டிலும் தலைசிறந்த பௌத்த தத்துவ ஞானிகளும் உரையாசிரியர்களும் காணப்பட்டனர். இப் பௌத்த பெரியார்களில் பாளி உரையாசிரியராக விளங்கிய புத்ததத்த தேரர், இந்தியாவின்உன்னதபௌத்த பல்கலைக்கழகமான நாலந்தா பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்த தர்மபாலதேரர், மகாயான தத்துவ ஞானியாகிய திக்குநாகர், சீனுவிலும் ஜப்பானிலும் தியான மார்க்க பௌத்தத்தைப் பரப்பிய போதிதர்மர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

கி. பி. ஆரும் நூற்ருண்டு தமிழ் நாட்டில் பௌத்தம் உச்ச நிலையை அடைந்திருந்த காலமாகும்.

இலங்கையிலும் ஐந்தாம் நூற்ருண்டில் பௌத்த மதத்தைத் தழுவிய தமிழ் மன்னர்கள் அனுராதபுரியை ஆண்டார்கள் என்றும் வரலாற்று ஆதாரங்கள்தெரிவிக்கின்றன. என்ருர்,

ஈவ்லின் ரத்னம் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்ற இவ்வுரையில் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர், அரசாங்க அதிபர், மற்றும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (கி)

BAYER

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கும் விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனையாளருக்கும்

ஒரு முக்கிய அறிவித்தல்

மேற்கு ஜேர்மன் பாயர் ஸ்தாபன விவசாய இரசாயன பொருட்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களே ஏகவிநியோகஸ்தராவார்கள்

யாழ். குடாநாட்டிற்கு ;

யூனியன் ஏஜென்ஸீஸ்
50A, பலாலி வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

கிளிநொச்சிப் பகுதிக்கு :

N. திருபாலசிங்கம்,
பாயர் கிருமி நாசினி கடை,
4, அந்தோனிப்பிள்ளை கட்டிடம்,
கரடிப் போக்கு,
கிளிநொச்சி.

ஹேக்கெம் லிமிட்டெட்,
400, டின்ஸ் வீதி,
கொழும்பு—10.

# இளம்பெண் மரணத்தில் சந்தேகம்: நஞ்சு பருக்கப்பட்டாரா?

## பகிரங்கத் தீர்ப்பு

(மாவிட்டபுரம்)

23 வயது இளம் பெண் ஒருவரது மரணத்திற்கான காரணத்தை அறிய முடியாமையால் பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டு உள்ளுறுப்புகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டதுடன் அவருக்கு நஞ்சு பருக்கியதாக சாட்சியத்தில் கூறப்பட்ட அயல்வீட்டு வாலிபரைக் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.

பரபரப்பூட்டும் இச்சம்பவம் அளவெட்டியில் நடந்துள்ளது.

இதில் இறந்த இளம் பெண் பாலசிங்கம் பரமேஸ்வரி (23 வயது) என்பவராவார். பொலிசாரால் தேடப்படும் அயல் வீட்டு வாலிபர் செல்லத்துரை மருதலிங்கம் என்பவராவார்.

இம்மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தினர்.

காலமான இளம்பெண்ணின் பேத்தியாரான செல்லப்பா பொன்னம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

காலமானவரும் நானும் காலமானவரது தாயும் (வாய் பேசமுடியாதவர்) ஒரே வீட்டில் வசித்துவந்தோம் காலமானவர் ஒன்றரை வருடத்துக்கு முன் பாலசிங்கம் என்பவரை திருமணம் செய்து பின் அவர் விட்டுப் பிரிந்து சென்று விட்டார். பின்னர் அயல்வீட்டு வாலிபரான செல்லத்துரை மருதலிங்கத்திற்கும் இவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஏற்கனவே இத் தொடர்பு காரணமாக ஒரு குழந்தை பிறந்தது. தற்போதும் காலமானவர் 6 மாத கர்ப்பிணியாக இருந்தார்.

சம்பவதினம் நடுஇரவு ஒரு மணிபோல் அயல்வீட்டு வாலிபரான மருதலிங்கம் வந்து காலமானவரைக் கூப்பிட்டார். அவர் வெளியே சென்று பின்சிறிது நேரத்தால் ஓடி வந்தார். மருதலிங்கம் நஞ்சு பருக்கி விட்டதாகக் கூறிக் கொண்டு ஓடிவந்த அவர் துடிதுடித்தார். உடனடியாக தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம் என்றார்.

பிரேத பரிசோதனை செய்த வைத்திய அதிகாரி தர்மராணி சிவயோகன் மரணத்திற்கான காரணத்தை அறிய முடியாதிருப்பதாக தெரிவித்தார். கிருமிநாசினியா அல்லது வேறுகாரணமா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து மரண விசாரணை அதிகாரி பகிரங்கத் தீர்ப்பு வழங்கி உள்ளுறுப்புக்களை இரசாயன பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்புமாறும் உத்தரவிட்டார்.

மரண விசாரணையின்போது காலமானவருக்கு நஞ்சு பருக்கியதாக சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்ட அயல் வீட்டு வாலிபருக்கு வேறு இடத்தில் திருமணம் பேசப்பட்டதாகவும் தெரியவந்தது.

இதுபற்றி மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா கருத்துத் தெரிவிக்கையில் மேற்படி வாலிபர் காலமான பெண்ணுடன் தொடர்ந்தும் பழகுவதால் தமது திருமணத்திற்கு இடைஞ்சலாக இருக்குமென நினைத்திருக்கலாம். அத்துடன் வயிற்றில் வளரும் பிள்ளையை அழிக்க வென்று கூறி கிருமிநாசினியைப் பருக்கியிருக்கலாம் என்று தாம் ஊகிப்பதாகக் கூறினர்.

## காணிக் கச்சேரி

[சாவகச்சேரி]

மாவட்டக்காணி அபிவிருத்தி அதிகாரி திரு. கே, ரீ. சம்பந்தன் தலைமையில் காணிக்கச்சேரி ஒன்று சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது உதவி அரசாங்க அதிபர் திரு, கே. துரைராசா கிராம அதிகாரிகள் சுமார் 500 விவசாயிகள் இதிற்கலந்து கொண்டனர்,

குடியிருந்த அரசாங்கக் காணிகள், 3மாச காலத்துக்குள் ஆட்சி உறுதிமுடித்துக் கொடுக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் திரு, சம்பந்தன் தெரிவித்தார்.

## ப. நோ கூ ச. தலைவர்.

(புலோலி)

பருத்தித்துறை தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளைத்தலைவர் திரு, கதிர்சாமுதுரைராசா பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றிவரும் திரு. துரைராசா பருத்தித்துறை நகரசபை வரியிறுப்போர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். இவர் காலஞ்சென்ற பருத்தித்துறை உடையாரின் புத்திரரென்பதும் குறிப்பிடத்தக்கது.

பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் உபதலைவராக திரு. க. வே, முத்துக்குமாரசாமியும் தெரிவு செய்யப்பட்டார்.

(இ)

## 'மஹாபொல' விற்பனையில் ரூ. 10 கோடி வருமானம்

(கொழும்பு)

இதுவரை நடைபெற்ற 'மஹாபொல' சந்தை விற்பனைகளில் 10 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக, பிரதி வர்த்தக அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு 'மஹாபொல' சந்தை விற்பனைகளிலும் சராசரியாக 30 லட்சம் முதல் 40 லட்சம்வரை விற்பனைப் பெறுமதி அதிகரித்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

'மஹாபொல' சந்தைகள் மூலமாக உற்பத்தியாளரும், பாவனையாளரும் அதிக பயனடைகின்றனரென்றும் இச்சந்தைகளை நாட்டின் சகல பாகங்களிலும் நடத்த தாம் யோசித்திருப்பதாகவும் பிரதியமைச்சர் அறிவித்தார். (கி)

## கோயில் ஓடுகளைத்திருடியவருக்கு கடூழியச்சிறையும் அபராதமும் விதிக்கப்பட்டது

(சாவகச்சேரி)

கொடிகாமம் கட்டை பறித்தான் பிள்ளையார் கோவில் மடத்திலுள்ள 480ரூபா பெறுமதியான 290 ஓடுகளைத் திருடியவருக்கு சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்ற நீதிபதி எஸ். யேசுதாசன் 3மாசக் கடூழிய சிறைத்தண்டனையும் 250 ரூபா அபராதமும் விதித்தார்,

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் பழைய பூங்கா வீதியைச்சேர்ந்த கந்தையா வேலாயுதம் என்பவர்20 12-81 கட்டைபறித்தான் கோவிலுக்குச்சொந்தமான 480 ரூபா பெறுமதியான 290 ஓடுகளை பட்டப்பகலில் களவாகலொறியில் ஏற்றியதாக சாவகச்சேரி பொலிசாராற் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். யேசுதாசன் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டபொழுது கோவில் பாதுகாப்பாளரான ஆசிரியர் மா. சிதம்பரநாதன் சாட்சியமளித்தபின் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டு 3 மாதக் கடூழியச்சிறையும் அபராதமும் விதிக்கப்பட்டது. முதல் மூன்று மாசம் சிறைவாசம் அனுபவித்தபின் அடுத்த 1 மாதச்சிறைவாசம் தொடரவேண்டுமென நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

இதற்குமுன் இவ் எதிரி மூன்று களவு வழக்குகளிற் குற்றவாளியாகக் காணப்பட்டு ஒருவழக்கில் ⁰மாதச் சிறைவாசமும் அடுத்த இரு வழக்குகளில் நன்நடத்தைப் பிணையிலும் பாதுகாவலர் கட்டளையிலும் விடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் சுன்னுகம் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எட்வேட் விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்தார். (இ)

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை

### பஸ் பிரயாண சீட்டிற்கான சீட்டிழுப்பு முடிவுகள்

#### யாழ். சாலை

| | | |
|---|---|---|
| 1ம் பரிசுக்குரிய ரிக்கட் இல — | FCC | 628598 |
| | FUC | 501280 |
| | FCC | 819088 |
| 2ம் பரிசுக்குரிய ரிக்கட் இல — | FCC | 951955 |
| | FUC | 501830 |
| | FUC | 941044 |
| 3ம் பரிசுக்குரிய ரிக்கட் இல — | FCC | 588617 |
| | FUC | 811101 |
| | FCC | 485397 |
| ஆறுதல் பரிசுக்கான ரிக்கட் இல: — | FCC | 869032 |
| | FUC | 854253 |
| | FCC | 295260 |

#### பருத்தித்துறைச்சாலை

| | | |
|---|---|---|
| 1ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FMX | 730327 |
| | FMX | 928704 |
| 2ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FMX | 573866 |
| | FMX | 905378 |
| 3ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FMX | 458202 |
| | FMX | 665520 |
| ஆறுதற் பரிசுக்கான ரிக்கட் இல: — | FMX | 453977 |
| | FMX | 322892 |

#### மன்னார்ச்சாலை

| | | |
|---|---|---|
| 1ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FAZ | 751169 |
| 2ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FAZ | 687386 |
| 3ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FAZ | 784344 |
| ஆறுதற் பரிசுக்கான ரிக்கட் இல: — | FAZ | 665848 |
| | FAZ | 660695 |
| | FAZ | 810409 |

#### முல்லைத்தீவுச்சாலை

| | | |
|---|---|---|
| 1ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FQB | 448509 |
| 2ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FQB | 529061 |
| 3ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FQB | 854379 |
| ஆறுதற் பரிசுக்கான ரிக்கட் இல: — | FQB | 436007 |
| | FQB | 491136 |
| | FQB | 576393 |

#### வவுனியாச்சாலை

| | | |
|---|---|---|
| 1ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FJS | 771628 |
| 2ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FJS | 727112 |
| 3ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FJS | 728809 |
| ஆறுதற் பரிசுக்கான ரிக்கட் இல: — | FJS | 666888 |
| | FJS | 807039 |

#### கிளிநொச்சிச்சாலை

| | | |
|---|---|---|
| 1ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FSI | 039777 |
| 2ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FSI | 058911 |
| 3ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FSI | 075492 |
| ஆறுதற் பரிசுக்கான ரிக்கட் இல: — | FSI | 117042 |
| | FSI | 158566 |
| | FSI | 673933 |

#### காரைநகர்ச்சாலை

| | | |
|---|---|---|
| 1ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FQP | 952230 |
| 2ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FQP | 966930 |
| 3ம் பரிசுக்கான ரிக்கட் இல: — | FQP | 817675 |
| ஆறுதற் பரிசுக்கான ரிக்கட் இல: — | FQP | 807634 |
| | FQC | 068851 |
| | FQP | 948302 |

க. தனபாலசிங்கம்
(பொதுசனத் தொடர்பு அதிகாரி, வடபிராந்திய போக்குவரத்துச்சபை)

எஸ், கனகரத்தினம்
(தலைவர்/தகுதிவாய்ந்த அதிகாரி)
வடபிராந்திய
போக்குவரத்துச்சபை

2274

நீங்கள் ஒரு கராஜ் சொந்தக்காரராகவோ அல்லது புதிய, புதுப்பிக்கப்பட்ட வாகனத்தின் இறக்குமதியாளராகவோ இருப்பின் எமது காரியாலயத்தில் "முகவராக"ச் சேர்ந்து மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நாம் பிரதானமாக கீழ்க்கண்ட இடங்களில் வசிப்பவர்களையே முகவர்களாக விரும்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கானை | கிளிநொச்சி |
| அச்சுவேலி | வட்டுக்கோட்டை | வவுனியா |
| புத்தூர் | காரைநகர் | மன்னார் |
| வல்வெட்டித்துறை | கொடிகாமம் | முல்லைத்தீவு |
| காங்கேசன்துறை | சாவகச்சேரி | |

மேலும் விபரங்களுக்கு கடிதமூலமாகவோ அல்லது நேரில் வந்தோ என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

விற்பனை முகாமையாளர்,

TFC

த பிரின்ஸ் கம்பனி லிமிட்டெட்,

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—15, 4—45, 7—00, 9—30
FIVE ANGRY WOMEN
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

Rajah JAFFNA
Daily 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
BUDSPENCER in
FIVE MAN ARMY
(Color-Scope)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45, 7—00: 9—30
JIM BROWN, JIM KELLY
FRED WILLIAM SON
Three The Hard Way
(Action-color-adults)
Await: HORROR EXPRESS

WINDSOR (JAFFNA)
Daily 10.30, 2.30, 4.30, 7.00, 9.30
14th Only
They didn't know his face-
They didn't know his name
But they'd never forget
The day he drifted into town-
Clint Eastwood—Unique Director in
High Plain Drifters
(Technicolor-Panavision)


15th and 16th only
The touch, terrifice TERENCE and the Big
Bud in their newest smashing delight-full of
fun & Laughter
ODDS AND EVENS

17th to 19th only
The Taxi Driver (Strictly for adults)

யாழ். றீகல் தினசரி 10—30, 2—30, 6—15, 9—30 நான்குகாட்சிகள்
இன்றே பாருங்கள்!
அன்று ''பாசமலரை''த் தந்தார் K.P. கொட்டாரக்கரா
நேற்று ''பசி''யைத் தந்தார் இயக்குனர் துரை
இன்று இருவரும் இணைந்து தருகிறார்கள்.




நிறம் மாறாத பூக்கள் புகள் விஜயன் ★ ராஜேஷ்
சுருளிராஜன், மாஸ்டர் ரவிக்குமார்
சத்தியகலா, சுவர்ணலதா
(ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்:- ''நீயா'' புகழ் துரை




யாழ். நகரில் புதிதாக உருவாக்கப்படவிருக்கும் நூல் நிலையத்தின் மாதிரிப் படம் இது. இம்மாதம் 22ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நூலகவாரம் 28 திகதி முடிவடையும். 25ம் திகதி கொடித்தினமும் அனுஷ்டிக்கப்பட இருக்கிறது.

# "அரசின் திட்டங்கள் வெற்றிபெற விசேடசேவைஅலுவலர் உழைக்கவேண்டும்"

(மாவிட்டபுரம்)

''விசேட சேவை அலுவலர்களுக்கு பல பொறுப்புவாய்ந்த பணிகள் தரப்பட்டுள்ளன. அவற்றைத் திறம்படச் செய்து அரசாங்கத்தின் திட்டங்கள் வெற்றிபெற அவர்கள் உழைக்கவேண்டும்.''

இவ்வாறு வலி. வடக்கில் நியமனம் பெற்றுள்ள விசேட சேவை அலுவலர்களுக்கு வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

அரசாங்கத்தின் கிராமோதய திட்டத்தின்கீழ் கிராமோதய சபைகளை அமைக்கும் பணி விசேட சேவை அலுவலர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உணவு முத்திரை விநியோகமும் இவர்களது கண்காணிப்பில் விடப்பட்டுள்ளது. இப்பணிகளை ஊழல், மோசடி, நேர்மையின்மை என்பவற்றுக்கு இடம் வையாமல் சிறப்பாகச் செய்யவேண்டும். இப்பதவிக்கு களங்கம் ஏற்படாதவகையில் சேவை புரியவேண்டும்.''

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. சீவரத்தினம் பேசுகையில், கிராமங்களில் கடமை புரியும் விசேட சேவை அலுவலர்கள் கிராமங்களின் அபிவிருத்தியில் அதிக கவனம் எடுக்கவேண்டும் என்றுர்

வலி. வடக்கில் நியமனம் பெற்றுள்ள 9 விசேட சேவை அலுவலர்களும் வருமாறு:—

நா. சிவதாசன் (தெல்லி. கிழக்கு, பலாலி), உ. ரவீந்திரன் (தெல்லி. வடமேற்கு, கீரிமலை), சி. மாசிலாமணி (மயிலிட்டி தெற்கு), கு. கனகலிங்கம் (மல்லாகம்), ஏ. தனபாலரத்தினம் (காங்கேசன்துறை மயிலிட்டிக்கரை), ச. சிவகுமார் (தெல்லி. தென்மேற்கு, மாவிட்டபுரம்), எஸ். சிவயோகநாதன் (அளவெட்டி வடக்கு, தெற்கு), வே. வன்னியசிங்கம் (பழை. வீமன்காமம், மயிலிட்டி வடக்கு), எஸ். அம்பிகைகுமார் (புன்னலைக்கட்டுவன், வசாவிளான்).

# திடீர் வேட்டை

யாழ்ப்பாணம்)

யாழ். உள்நாட்டு வியாபாரத்திணைக்களப் பரிசோதகர்கள் புத்தூர், நீர்வேலி, ஆவரங்கால், இராசா வீதி, யாழ்ப்பாணம் சந்தை ஆகிய இடங்களில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட போது முத்திரையிடாத அளவைகள், நிறுவைகள், படிகள் கண்டுபிடிக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் இதில் அகப்பட்டுள்ளது.

# பொலிஸ்நிலையம் பொது இடமல்ல

## கலாட்டா செய்தவழக்கில் எதிரிவிடுதலை

(சாவகச்சேரி)

''நுணுவில் மேற்கைச் சேர்ந்த செல்லையா ஸ்ரீகந்தராசா என்பவர் பொது இடத்தில் மதுபோதையில் தகாதவார்த்தைகளைப் பேசி கலாட்டா செய்ய முற்பட்டார் எனச் சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் பொலிஸ் நிலையத்திற்கு 1981 ஆடி 21ம் திகதி குடிபோதையில் சென்றதாகவும் அங்கே சச்சரவு வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தெரியவந்தது. எதிரிதரப்புச் சட்டத்தரணி சீ. பாலகிருஷ்ணர் பொலிஸ் நிலையம் பொது இடமல்ல என்ற சட்ட நுணுக்கத்தைவைத்து வாதாடினுர். ஈற்றில் நீதிபதி எம். எச். காரியப்பர் சட்டத்தரணியின் வாதத்தை ஏற்று எதிரியை விடுதலை செய்தார்.

# சுவீகரிப்புக்கு எதிர்ப்பு

(சாவகச்சேரி)

சுமார் 50 வருடங்களுக்கு மேலாக இருந்துவரும் அரசாங்க ஊழியர் பொழுதுபோக்கு விளையாட்டுக்கழகத்தை சாவகச்சேரி நகரசபை சுவீகரிக்க முடிவு செய்துள்ளது.

நகரசபைக்கு அருகாமையிலிருப்பதால் நகரசபை மண்டபம் அமைப்பது தொடர்பாக இதை எடுக்க ஆலோசனை செய்யப்படுகிறது, ஆனல் அக்கழகத்தை சேர்ந்த அங்கத்தவர்கள் இதை எடுப்பது அநீதிஎன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் மூலம் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர்,

விளையாட்டுக்கழகத்தை அமைக்கவிரும்பும் நகரசபை விளையாட்டுக்கழகத்தை சுவீகரிப்பது வேடிக்கையாகும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா நடித்த
கலைஞர் மு. கருணநிதியின்
வண்டிக்காரன் மகன்

குறிப்பிட்ட சில தினங்கள மட்டும்
வெல்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
நூல்வேலி

ஸ்ரீதர் யாழ். நகர் தினசரி 10:30, 2:30, 6:00, 9:30
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை
15-2-82 முதல் நினைவில் நின்றவள்

# புதிய ஆசிரியர் நியமனம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கலே, புத்தளம், அனுராதபுரம், பொலநறுவை, மன்னார், வவனியா, முல்லைத்தீவு, பதுளை. மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், கேகாலை.

விவசாயம்: களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, மாத்தளை, திருமலை, குருநாகல். அநுராதபுரம், மன்னார், வவனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு. பதுளை, நுவரெலியா.

மனையியல்: களுத்துறை, கேகாலை, மாத்தளை. திருகோணமலை, குருநாகல், மன்னார், கண்டி, அநுராதபுரம், வவனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, பதுளை, மட்டக்களப்பு.

விஞ்ஞானம்: மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவனியா, குருநாகல், நுவரெலியா.

கணிதம்: நுவரெலியா, குருநாகல், வவனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு.

சித்திரம்: மட்டக்களப்பு, பதுளை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவனியா, மன்னார், அநுராதபுரம், திருகோணமலை, நுவரெலியா, கண்டி, கேகாலை.

இசை: மட்டக்களப்பு. யாழ்ப்பாணம், பதுளை. முல்லைத்தீவு, திருகோணமலை, வவனியா.

நடனம்: மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவனியா, முல்லைத்தீவு, கண்டி.

இந் நிலையில் தமிழ் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட 1021 நியமனங்களும் பிரித்துத் தான் வழங்கப்படுகின்றது.

தமிழ்ப்பகுதியை பொறுத்த வரை யாழ்ப்பாணம் — 1601, வவனியா — 342, மட்டக்களப்பு — 1201, என்ற அடிப்படையில் சகல ஆசிரியர்களுக்கும் வெற்றிட முண்டு. இந்த வெற்றிடத்தில் குறிப்பாக இருபத்தைந்து சத வீதம் தான் புதிய நியமனத்தில் பூர்த்தி செய்யப்படக்கூடும்.

அதே நேரத்தில் மேற்படி விசேட பாடங்களை மட்டும் கற்பிக்க ஆசிரியர் நியமனம் செய்தால் மட்டும் போதுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஏனையபாடங்களை கற்பிக்க ஆசிரியர்கள் தேவை இல்லையா?

## ஆரம்பப் பாடசாலைகள்

குறிப்பாக பின் தங்கிய கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகள் அநேகமானவை ஆரம்பப் பாடசாலைகள் தான். ஆரம்பக்கல்வி திறம்பட விருந்தால் தான் உயர்கல்வி சிறப்பாக அமையமுடியும் விசேட பாடத்திற்குரிய ஆசிரியர்களை கொண்டு சிரேஷ்ட பாடசாலைகளின் பற்றுக்குறையை மட்டுமே ஓரளவு நீக்கமுடியும். அப்படியானல் நாட்டின் பல பாகங்களிலும் நிலவும் 50—250 வரையில் பாலர் முதல் 5ம் தரம் வரை இயங்கும் ஒரு ஆசிரியர் இருஆசிரியர் நிலைமை என்ன? தொடர்ந்தும் இதே நிலைமைதானு? கல்வித்தரம் முன்னேற வழியில்லையா?

தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருந்தால் ஏன் இப்பாடசாலைகள் அத்தகையநிலையில் பலவருடங்களாக இயங்க வேண்டும்? மேலதிக ஆசிரியர்கள் எந்தப் பாடசாலைகளில் கடமைபுரிகின்றார்கள்? அவர்களை பரந்த அளவில் இடமாற்றம் செய்தால் என்ன?

எக்கட்டத்திலும் இடமாற்றம் செல்வாக்கினல் ரத்து செய்யப்படக்கூடாது.

பாராளுமன்ற உறும்பினர்களின் தலையீடு முன்னர் இருந்தபோதிலும் இப்போது கல்விச்சேவை ஆணைக்குழுவிலும் நுழைந்து விட்டதாகப் புகார் செய்யப்படுகிறது குறிப்பாக இவ்வருடம் ஆசிரிய பயிற்சியை முடித்துவிட்டு வெளியேறிய ஆசிரியர்கள், வடக்கு கிழக்குக்கு வெளியே அனுப்பப்பட்டனர். ஆனாலும் சிலரின் இடமாற்றம் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சுமீது இறுதியில் ரத்து செய்யப்பட்டதாம்.

இதேமாதிரித்தான் ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலும் அந்தந்தத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு, எம். பிக்கள் தான் வெற்றிடத்திற்கு விரும்பியவரை தெரிவு செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

தகுதியானவர்கள் நியமனம் பெற்று குறுகிய கலப்பயிற்சி பெறப்போகின்றார்கள். மே மாத ஆரம்பத்தில் இவர்கள் பாடசாலைகளில் கடமை புரியப் போகிறார்கள் போட்டிப் பரீட்சையில் தகுதியானவர்கள் என்ற பெருமையுடன் இவர்கள் கடமை புரியப் போகின்றார்கள்.

இது ஒருபுறமிருக்க; மட்டக்களப்பு, மன்னார், நுவரெலியா கல்வித்திணைக் களங்களில் 1980ஆண்டு அக்டோபர்மாதம் ஆசிரிய நேர்முகப்பரீட்சைக்கு, சென்று சத்தியப்பிரமாணம் எடுத்தும், கல்விச்சேவை ஆணைக்குழுவினல் இடைநிறுத்தம் செய்யப்பட்ட 275 பேருக்கு நியமனம் உண்டா? இல்லையா? என்ற முடிவு இதுவரை வெளியாகவில்லை. இவர்கள் நிலைமை பரிதாபகரமானது. இவர்களுக்கு ஏன் நியமனம் வழங்கமுடியாது? சத்தியப்பிரமாணம் எடுத்ததும் இந்த நிலையென்றல் இதற்கு யார் பொறுப்பு?

இது இவ்வாறிருக்க, தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் அண்மையில் சுவீகரித்தது அங்கு 1900 ஆசிரியர்கள் பற்ருக்குறை. இதன் விளைவாக மலையகத்திலுள்ள இரண்டு லட்சத்து 50 ஆயிரம் சிறுர்களில் 79 ஆயிரம்தான் பாடசாலை செல்கிறுர்கள்.

பற்ருக்குறை நீங்க அண்மையில் சுவீகரித்த தோட்டப் பாடசாலைகளில் கடமை புரிந்த 588பேர் அரச நியமனம் பெற்றனர். மிகுதி 402 பேருக்கும் இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை.

தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் நியமனத்திற்காக அமைச்சரவை அங்கீகாரத்துடன், திறைசேரி நிதியும் வழங்கியது ஆனல் இதுவரை விண்ணப்பம் கோரப்படவில்லை "தெய்வம் விடைகொடுத்தும் பூசாரி விடை கொடுக்காத நிலைகதைமாதிரியாகிவிட்டது.

புதிதாக நடைபெறப் போகும் ஆசிரிய நியமனத்தைப் பொறுத்தவரை, இது நாட்டிலுள்ள சிங்கள, தமிழ் முஸ்லிம், மற்றும் தோட்டப் பாடசாலைகளுக்கு "யானைப் பசிக்கு சோளப் பொரி" என்ற நிலைதான்! (உ)


உ

# அந்தியேட்டி
# சபிண்டீகரண அழைப்பு

சொக்கநாதர் கார்த்திகேசு
(நொத்தாரிஸ்)
மறைவு 18-1-82



எமது தந்தையாரின் மேற்படி கிரியைகள் மாசி மாதம் 5 ம் திகதி (17.2.82) புதன்கிழமை அதிகாலை 2.00 மணி தொடங்கி எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் அன்னரின் ஆன்ம சாந்திக்காக நடைபெறும் கிரியைகளில் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்

கா. யோகேந்திரனும்
சகோதரர்களும்

நெடுந்தீவு மத்தி
[illegible]தீவு. 22 82

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள தச்சுப்பட்டை இயந்திரம் ஒன்று விற்பனைக்குண்டு பார்வையிடவும், தொடர்புகளுக்கு: நாதன் தச்சுத் தொழிற்சாலை, பாரதி லேன், கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 2266

ஆஸ்பத்திரி வீதியில் வீடு உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி . ஜெகநாதன், 729, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம. 2254

வீடு கட்டுவதற்குகந்த ஒன்றரைப் பரப்பு சதுரக்காணி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புகையிரத நிலையத்திற்கு அண்மையாக விற்பனைக்குண்டு. நேரடியாக தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்: 713, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 2257

அரசாங்க உத்தியோகத்தர் உபயோகிக்கும் நல்ல நிலையில் உள்ள ஒஸ்டின் கேம்பிரிஜ் கார் (A 50 விற்பனைக்குண்டு. கரிச்சந்திரன், 7ம் கட்டை ஒழுங்கை, மல்லாகம். 2262

புத்தம் புதியவை VIDEO Cassette Recorder Washing Machine (Fully Automatic Electronic Clock Radio, Electric Can Opener Electric Coffee Grinder. தொடர்பு கொள்ளவும்: S. சந்திரன், 119 (307) கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2280

## FOR SALE

11 Sri series Toyota corolla KE 20 showroom condition. Owner leaving abroad Shantha, c/o Dr. T, Gangadharan, Van-West Clinic, Vannarponnai. Telephone: 7887. (2265)

## CLASSES

London Engineering 82/83 A.M.I.M.I. Inter and Final City and Guilds Electrical Engineering Parts II and III Technical English by London Qualified and Trained Training Specialist. Contact Imperial Engineers, opposite Teli Engineering, K. K. S. Road, Tellipallai 2245

## விற்பனைக்கு

'வெள்ளாம்போக்கட்டி' யில் மீசாலை கச்சாய் வீதிக்கருகில் 100 தென்னைகளும் 10 மாமரங்களும் உள்ள 26½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: r. சு. வைத்திலிங்கம், 'கணேச வாசா', கல்லூரி ஒழுங்கை, கொக்குவில். 2258

Peugeot 403 4 r 5713 இலக்க தொடர் கார் (14 2—82) ஞாயிறு நேரில் தொடர்புகொள்ளவும். சபாரட்னம், மில் லேன், மல்லாகம். 2242

நல்ல நிலையிலுள்ள 1 ஸ்ரீ 4000 தொடர் இலக்கம் உள்ள Vauxhall Victor கார் விற்பனைக்குண்டு. அ.கனகசிங்கம், 'அருமை இல்லம்', சுதுமலை வடக்கு, (செல்லத்துரை பாடசாலைக்கு அண்மையில்) மானிப்பாய். 2255

N. V. 8600 வீடியோ டெக் புத்தம் புதிய நிலையில் விற்பனைக்குண்டு. . கயிலாசநாதன், 161, மெயின் வீதி, பருத்தித்துறை. 2263

ஏழு அறை கொண்டபழைய கட்டிடம் நிலை, கதவு, யன்னல், ஏராளமான ஓடுகள், சீலிங் பலகையுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: S. S. பொன்னுத்துரை, 47, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 277

## தேவை

இந்து பிராமண சமூத்தைச் சார்ந்த அழகிய, படித்த, 30 வயது நிரம்பிய மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரன் தேடுகிறுர். மணமகன் நற்பண்புகள் நிறைந்த அரசாங்கத்துறையிலோ அன்றி தனியார் நிறுவனத்திலோ கடமை புரிபவராக இருத்தல் வேண்டும். தகுந்த சீதனம் வழங்கப்படும். முழு விபரங்களுடன் விண்ணப்பிக்க. விளம்பர இல: 2271 மே/பா ஈழநாடு, த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம். 2271

## பயிற்சி

எலக்றிக்கல் வயரிங் டிப்பிளோமா பயிற்சி 01—03—82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னேலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2256

3 ஸ்ரீ 170 மொறிஸ் ஒக்ஸ்போர்ட் பிரயாண வான்

# விற்பனை விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான நல்லநிலையிலுள்ள மேற்காட்டிய வான், கேள்விமூலம் விற்பனைக்குள்ளது [illegible]ண்ணப்பங்கள் [illegible]திவுத்தபாலில் இடது பக்கமேல்மூலையில் "வாகன கேள்வி விண்ணப்பம்" என்று எழுதி 1—3 82 க்கு முன்னர் பொதுமுகாமையாளருக்கு அனுப்பப்படல்வேண்டும்.

[illegible] விரும்புவோர் காரியாலய நேரத்தில் சங்கத்தில் 27 2 82 வரை வானைப் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை.
12—2—82. 22[illegible]

யாழ்/வைத்தீஸ்வர வித்தியாலய
பழைய மாணவர் மன்றம்

பழைய மாணவர் மன்றப் பொதுக்கூட்டம் 28—02—1982 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். பழைய மாணவர்கள் உடனே செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்

2281

# புதிய சினிமா படப் பாடல்கள்
# இசைத்தட்டுகள்

| | |
|---|---|
| மூன்றும் பிறை | வாழ்வே மாயம் |
| ராணுவ வீரன் | அச்சனைப் பூக்கள் |
| டிக் டிக் டிக் | மெட்டி |
| கிளிஞ்சல்கள் | அந்த 7 நாட்கள் |
| ராகம் தேடும் பல்லவி | தண்ணீர் தண்ணீர் |

இன்னும் பல.

V. P. P. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

"துர்க்காஸ்" றெக்கோடிங் பார்
68, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
2269

தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய

# சிறுகதை கவிதை போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் வருடாந்த மகா நாட்டையொட்டி அங்கத்துவ ஆசிரியர்களுக்கிடையே சங்கத்தினல் நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதைப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**சிறுகதை**

1ம் இடம்: திருமதி பரமேஸ்வரி யேசுநாதன். மன்/பெரியவிரிச்சான் அ. த. க. பாடசாலை. ''சேற்றில்மலர்ந்த தாமரைகள்''

2ம் இடம்: திரு. த. யோகராசா, நுவ/ராகலை தமிழ் ம கா வி த் தி யா ல ய ம். ''கைமாறு''

3ம் இடம்: திரு.எல்.செல்வசபாநாதன், யாழ்/பொன்னுலை. ''புது ரீச்சர் பள்ளிக்கூடம் போரு''

**ஆறுதல் பரிசில்கள்**

திரு. சி. வி. குணசேகரம், இ/நீலகம தமிழ் மகாவித்தியாலயம். ''ஒரு ஆசிரியர் அதிபராகிருர்''

திரு. மேரி பெயாற்றிஸ், மன்/வட்டக்கண்டல் தமிழ் ம. வித்தியாலயம். ''எதிர் பார்ப்புகள்''

திருமதி ரஞ்சினி தர்மலிங்கம் திரு/புனிதவளனுர் த. மகா வித்தியாலயம். ''அவளுக்கு வயது வந்துவிட்டது''

திருமதி கோகிலாதேவி மகேந்திரராசா, யாழ்/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம். ''நாளைய உலகின் நாயகர்கள்?'

**கவிதை**

1ம் இடம்: திருமதி ரஞ்சினி தர்மலிங்கம், திரு/புனிதவளனுர் த. ம. வித்தியாலயம். ''ஒரு ஆசிரியரின் கண்ணீர்''

2ம் இடம்: திருமதி கோகிலாதேவி மகேந்திரராசா, யாழ்/கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம். ''விழிப் புணர்ச்சி விரியவேண்டும்''

3-ம் இடம் திரு. ரி. சுந்தரலிங்கம் இ/எட்டியாந்தோட்டை தமிழ்மகாவித்தியாலயம் ''ஓ வெற்றி நிச்சயமே''

**ஆறுதல் பரிசு**

திரு. மு. மாணிக்கம் யாழ்/மாவிட்டபுரம் அமெரிக்க மிஷன் பாடசாலை ''கல்வியோ கல்வி''

செல்வி த. சிதம்பரப்பிள்ளை மட்/ஆரயம்பதி அ. த. க. பாடசாலை ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்''

திரு. க. அமரசிங்கம் மட்/ஆரையம்பதி அ. த. க. பாடசாலை ''கல்விப் பணிப்பாளருக்கு''

திரு. மு. பாலசுப்பிரமணியம் ஹ/கைலன்ஸ் த.ம. வித்தியாலயம் ''ஆற்றுது உழைத்த பாட்டாளி உதிரம்''

இவர்களில் முதலாம் இடத்திற்கு தங்கப் பதக்கம், இரண்டாம் இடத்திற்கு வெள்ளிப் பதக்கம், மூன்றுமிடத்திற்கு வெண்கலப் பதக்கம் என்பன பரிசாக வழங்கப்படும்.

இப்பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 5ம் திகதி யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில்இடம் பெறும்.

மேற்படி மகாநாட்டில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எரிக். டி. சில்வா கலந்து கொள்ள உள்ளார்.


**தேவை**

யாழ் நகரில் பிரபல்யமான ஒரு தொழிற்சாலைக்கு, பி. வி. சி. (PVC) பைப் இணைப்புக்கள் தயாரிக்கும் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. தகைமைகளுடன் நேரில் வரவும்

**தேவி கடைச்சல் நிலையம்**

(மக்கள் வங்கி அருகாமையில்)

107, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2273


## பண்டிதமணி குணமடைகிருர்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சத்திரசிகிச்சை ஒன்றிற்காக ஆனைப்பந்தி தனியார் மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடந்தபோதும் சில தினங்கள் அவர் மிகவும் பலவீனமுற்று இருந்தார். இப்போது உடல்நிலை குணமடைந்து வருவதாய் பேசக்கூடிய நிலையில் இருக்கிருர். அவருடைய மாணவர்கள், ரசிகர்கள். நண்பர்கள் பெருந்திரளாகச் சென்று பார்வையிட்டுச் செல்கின்றனர். (இ)

## வெளிநாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றது.

குறிகாட்டுவானிலிருந்து நேற்றுப் பிற்பகல் 3 மணி படகுச்சேவை நடைபெருததனல் நெடுந்தீவுக்குச் செல்ல வந்தவர்கள் புங்குடுதீவில் சர்வோதய நிலையத்திலும் மற்றும் சில பொது ஸ்தாபனங்களிலும் தங்கினுர்கள்.

கடல்அட்டைபிடிக்கச்சென்ற கடற்ரெழிலாளர் 20 பேர் நேற்றுமாலை வேலைமுடிந்து வேலணை செட்டிபுலத்திற்கு திரும்பியபோது.வீடொன்றில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டார்கள் என்று தெரிய வருகிறது.

நெடுந்தீவு சென்ற வெளிநாட்டு கோஷ்டியினரை நெடுந்தீவு மக்கள் உபசரித்து வரவேற்று அவர்கள் தங்குவதற்கான ஏற்பாட்டை செய்தார்கள் எனக் கடைசியாகக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது.

## கிராமோதய

(1ம் பககத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி — ஜனுதிபதி சந்திப்பையடுத்து விசேஷ சேவை அலுவலர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் 91 விசேட சேவை அலுவலர் பிரிவுகளிலும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்நியமனம் வழங்கப்பட்டதையடுத்து கிராமோதயசபைகள் செயல்படும்.

கிராமோதய சபைகளிடம் முக்கிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் அதில் அங்கத்துவம் பெறும் நடவடிக்கைகளில் இதுவரை பதிவு செய்யாத பொது ஸ்தாபனங்கள் ஈடுபட்டுள்ளன.

இதே நேரத்தில் ஏற்கனவே இச்சபையில் அங்கத்துவம் பெற்ற தகுதிவாய்ந்த பொது ஸ்தாபனங்களின் சில தலைவர்கள் கிராமோதய சபையின் தலைவர் பதவியை கைப்பற்றிக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

கிராமோதய சபைகள் கிராமசபை, பட்டினசபைப் பகுதிகளில் அமைக்கப்படுவதால் யாழ். மாவட்டத்தில் யாழ். மாநசரசபை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகள் ஆகியவற்றுள் அடங்கும் கிராமசேவை அலுவலர் பிரிவுகள் இவற்றில் இடம்பெறமாட்டா.

கிராமோதய சபைகளின் தலைவராக தெரிவு செய்யப்படுவோர் உதவிஅரசாங்க அதிபர் பிரிவுதோறும் அமைகின்ற பிரதேச சபையில் அங்கத்துவம் பெறுவார்கள். இச்சபையின் செயலாளராக உதவிஅரசாங்க அதிபர் விளங்குவார். தலைவராகக் கிராமோதய சபையின் தலைவர் ஒருவர் இடம் பெறுவார்.

## வேட்பு மனுக்கள் 24ல் ஏற்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணமகலைத்திணைக்கள கடன் வழங்கும் சபைக்கான பிரதிநிதிகள தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 24ம் திகதி காலை கல்விப் பணிப்பாளர் திரு. க சிவநாதன், நிருவாக உத்தியோகத்தர் திரு. கா. சந்திரராஜா ஆகியோர் முன்னிலையில் கல்வித் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கல்விச்சேவை-1, எழுதுவினைஞரும் அதனைச் சார்ந்தவை-1, சிற்றூழியர் 2, ஆசிரியசேவை 17 என்ற அடிப்படையில் மொத்தம் 21 ஆசனங்களைக் கொண்ட இச்சபையில் ஆசிரிய சேவையில்தான் பலத்த போட்டி ஏற்படக்கூடிய சூழ்நிலை ஆசிரிய வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

தமிழாசிரிய சங்கம் இரு பெண்மணிகள் உட்பட 17 வேட்பாளர்களை தெரிவு செய்துள்ளதோடு பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்களை சந்தித்து ஆதரவு திரட்டும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. இதேபோன்று சிலர் சுயேச்சையாகவும் ஈடுபட்டுள்ளார்கள்.

கிராமோதயசபை அடுத்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்டால ஏப்ரல் மாத நடுப்பகுதியில் பிரதேச சபைகள் செயல்படக்கூடும்.

பிரதேசசபைகள் ஏற்கனவே அரசாங்கக்கட்சி எம். பி.க்களின் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)


### மரண அறிவித்தல்

**முத்துக்குமாரு இராமலிங்கம்**

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த முத்துக்குமாரு இராமலிங்கம் காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், கதிர்காமநாதன் (கென்யா), காசிநாதன் (அரச பொறியியல் கூட்டுத்தாபனம், கிரான்), பழனிநாதன் (ஐக்கிய திரிதல் நெய்தல் ஆலை, ஜாஎல), சண்முகநாதன் (உகண்டா), கைலாசநாதன்(அலெக்சான்ட்ராதொழில் ஸ்தாபனம், எக்கல) தேவகனி, முத்துக்குமரன் ஆகியோரின் தந்தையும், பாலச்சந்திரன் (மண் பரிசோதகர் நீர்ப்பாசன திணைக்களம் கொழும்பு) சுபத்திராதேவி, சிவனேஸ்வரி ஆகியோரின் மாமனுரும் ஆவார். அன்னுரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆஸ்பத்திரி வீதி, 49ம் இலக்கத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை (14-2-82) பிற்பகல் 4.30 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2284

### மரண அறிவித்தல்

**வல்லிபுரம் சுப்பிரமணியம் (மெக்கானிக்)**

யாழ்ப்பாணம் ஆரியகுளம், 70, பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த வல்லிபுரம் சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். இவர் பிள்ளையம்மாவின் அன்புக்கணவரும் நீதிராசா, ஸ்ரீஸ்கந்தராசா, ஜெயராசா, விஜயராஜா, சுசிலா, காமினி, மாலினி ஆகியோரின் ஆசைத்தந்தையும், காலஞ்சென்றவல்லிபுரம், ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், நடேசு, தம்பிப்பிள்ளை, செல்லத்துரை, பொன்னுத்துரை (முன்னுள் சமாதான நீதிபதியும்-சன்னதி முருகன் லொறி உரிமையாளரும்) இராசம்மா, தங்கம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரியகுட்டி சாமி (அம்பாள் ரவல்ஸ் உரிமையாளர்) திருநாவுக்கரசு, சதாசிவம், நயினுர் (அம்பாள் ரவல்ஸ் உரிமையாளர்) சண்முகராசா, இராசம்மா, கண்மணி, கமலம்ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சந்தையா பார்வதி ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னுரின் பூதவுடல் ஆரியகுளம், பருத்தித்துறை வீதி, 70-ம் இலக்க இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக 14—2—82 ஞாற்றுக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

2285

# மாபெரும் T. V. பரிசுப் போட்டி

ஆரம்ப திகதி 15-02-82

முடிவு திகதி 15-04-82

நீங்கள் எம்மிடம் வாங்கும் National, Telefunken, தொலைக்காட்சிப் பெட்டிகளின் ரசீதுகளின் இலக்கங்கள் குலுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

முதற் பரிசு :- கொழும்பிலிருந்து சென்னை சென்றுவர விமான ரிக்கற்.

இரண்டாம் பரிசு :- கசற் றேடியோ ஒன்று.

மூன்றும் பரிசு :- றேடியோ ஒன்று.

National, Telefunken, கலர், கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள் கவர்ச்சிகரமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனைக்குப் பிந்திய சேவைக்கு உத்தரவாதம்

குலுக்கப்படும் இடமும் திகதியும் பின்னர் 'ஈழநாடு' பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

## V. K. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி, (போன்: 7447) யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126.